

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜானி ஜகான் கான் சாலை பிரசன்டேசன் ஆலய சமுதாய கூடத்தில் நேற்று (20.8.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார். இந்த ஆய்வின்போது மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் திருமதி ஈஸ்வரி வெங்கடேசன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உடனிருந்தனர்.

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில்

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்: ஏராளமானோர் பங்கேற்பு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்களின் மனுக்களுக்குத் தீர்வு!

**சென்னை, ஆக. 23 -**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜானி ஜகான்கான் சாலை பிரசன்டேசன் ஆலய சமுதாய கூடத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார்.**

பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களின் கீழ் பொதுமக்களின் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் ஜுலை 15 முதல் நவம்பர் 2025 வரை அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 10,000 முகாம்கள் நடைபெறவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன. மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று, விண்ணப்பத்தினை பெற்று, பூர்த்தி செய்து தங்கள் விண்ணப்பத்தினை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறுகின்றன.

சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலம், வார்டு115 ஜானி ஜகான் கான் சாலை பிரசன்டேசன் ஆலய சமுதாய கூடத்தில் நேற்று (20.8.2025) நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை உள்ளிட்ட 13 அரசுத்துறைகள் மூலம் மக்களிடமிருந்து மனுக்கள் பெற்று உரிய பதிவுகளை மேற்கொண்டு அதற்கான ஒப்பமும் வழங்கப்பட்டது. முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், சிறப்பு மருத்துவ முகாமும் நடத்தப்பட்டது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலம், வார்டு115 ஜானி ஜகான் கான் சாலை பிரசன்டேசன் ஆலய சமுதாய கூடத்தில் இன்று நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் இடம்பெற்ற ஒவ்வொரு அரசு துறை பகுதிக்கும் நேரில் பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார். மேலும் இந்த முகாமில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் வழங்கப்படுவதையும் பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் ஈஸ்வரி வெங்கடேசன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக — மற்றும்

# நாடு முழுவதும் செயல்படும் பொது சேவை மையங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

## மக்களவையில் — தே.மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 21 - மக்களவையில் கள்ளக் குறிச்சி தொகுதி உறுப்பினர் தே.மலையரசன் எழுப்பிய கேள்விகள் வருமாறு:

தமிழ்நாடு மாநிலத்தில், குறிப்பாக மாவட்ட வாரியாக, நாடு முழுவதும் செயல்படும் பொது சேவை மையங்களின் (CSC) எண்ணிக்கை?

கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் CSCகள் மூலம் தற்போது வழங்கப்படும் அரசு மற்றும் தனியார் சேவைகளின் வரம்பு என்ன?

தமிழ்நாட்டில் CSCகள் வழங்கும் அணுகல் சேவை தரம் மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு ஆதரவு குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் மதிப்பீட்டை நடத்தியுள்ளதா

CSC உள்கட்டமைப்பை வலுப்படுத்த அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள், குடிமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் CSCகளை நடத்தும் கிராம அளவிலான தொழில் முனைவோரின் (VLEs) நிதி நம்பகத்தன்மையை உறுதி செய்தலுக்கான நடவடிக்கைகள் என்ன?

தமிழ்நாடு தொலைதூர மற்றும் பழங்குடிப் பகுதிகளில் உள்ள CSCகள் முழுமையாக செயல்படுவதையும் டிஜிட்டல் முறையில் பொருத்தப்பட்டிருப்பதையும் உறுதி செய்வதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட குறிப்பிட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? என மக்களவையில் கள்ளக் குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.



வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நேற்று (20.08.2025) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு உணவுபதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் முன்னெடுப்புகள் மற்றும் செயல்பாடுகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, , வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், , தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமாரவேல்பாண்டியன், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் த.ஆபிரகாம், திருமதி ஷோபனாகுமார், மண்டலதலைவர், APEDA. தமிழ்நாடு உணவுபதப்படுத்துதல் மற்றும் வேளாண்மை ஏற்றுமதி ஊக்குவிப்பு கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் கோ.அழகுசுந்தரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நேற்று (20.08.2025) அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி சுவாமி தரிசனம் செய்ய மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், உடனிருந்தார்.

### அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில்

# பக்தர்கள் எளிதாக தரிசனம் செய்ய நடவடிக்கை!

## பணிகளை ஆய்வு செய்தபின்– அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

திருவண்ணாமலை, ஆக. 21 -

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வவேலு அவர்கள் நேற்று (20.08.2025) அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி சுவாமி தரிசனம் செய்ய மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது திருவண்ணா மலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், உடனிருந்தார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வவேலு நேற்றைய தினம் அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் இராஜகோபுரம் எதிரில் பக்தர்கள் கட்டணமில்லா தரிசனம் மேற்கொள்ள அரசு சார்பில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், வரிசைகள் (QLINE) ஏற்படுத்துவது குறித்தும், வட ஒத்தவாடை தெருவில் காத்திருப்பு வரிசைகள் அமைக்கப்பட்டு வரும் பணியினையும், கிரிவல ப் பாதை, ஆணாய்பிறந்தான் பகுதியில் அரசு அருங்காட்சியகம் அமையுள்ள இடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது அமைச்சர் எ.வவேலு செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:

அருணாச்சலேசுவரர் திருக்கோயிலுக்கு வெளி நாடுகள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து அதிகளவில் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்வதற்கு வருகை புரிகின்றனர். மேலும், வார விடுமுறை நாட்கள், பௌர்ணமி தினங்கள் மற்றும் கார்த்திகை தீப திருவிழா நாட்களில் இலட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலைக்கு கிரிவலம் வருகின்றனர். அவ்வாறு வருகின்ற பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி சுவாமி தரிசனம் செய்யவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் அரசு சார்பில் பல்வேறு மேம்பாட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன்தொடர்ச்சியாக இன்றைய தினம் இராஜகோபுரம் எதிரில் உள்ள பகுதியில் இருந்து கட்டணமில்லாமல் பக்தர்கள் எளிதாக சுவாமி தரிசனம் செய்ய வரிசைகள் (LINE) அமைக்கப்பட உள்ள பணிகள் குறித்து பொதுப்பணித்துறை தொழில்நுட்ப வல்லுநர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், வட ஒத்தவாடை தெருவில் காத்திருப்பு வரிசைகள் அமைக்கப்பட்டு வரும் பணியும் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் நிறைவடைந்தால் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பது தவிர்க்கப்படும் என்று பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வின் போது, மாநில தடகள சங்க துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன், பொதுப்பணித்துறை தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஜி.எஸ்.டி. வரி விதிப்பு: வருவாய் இழப்பை ஈடுசெய்ய

# இழப்பீட்டு மேல்வரியினை நீட்டிக்க வேண்டும்!

## புதுடெல்லியில் நடைபெற்ற அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

**புதுடெல்லி, ஆக. 21 -**

**புது தில்லியில் நேற்று (20-08-2025) நடைபெற்ற ஆயுள் மற்றும் சுகாதார காப்பீட்டிற்கான அமைச்சர்கள் குழுக் கூட்டம் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டு மேல்வரியினை மறுஉருவாக்கம் செய்வதற்கான அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில், தமிழ்நாடு நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமுறையில் தமிழ்நாட்டின் நிதி ஆதாரத்தினை பாதுகாக்க வேண்டி விரிவாக வலியுறுத்தினார்.**



இது குறித்து அவர் பேசியது வருமாறு:-

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதங்களை சீரமைக்கும் முனைவுகள் வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில், மாநிலங்களின் நிதி ஆதாரங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். தமிழ்நாடு உட்பட பல மாநிலங்கள் பெரும் உள்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் சமூக நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில், இதற்கான செலவினங்களைக் குறைக்கும் வகையில் வரி சீரமைப்பு வழிவகுக்கக்கூடாது.

குறிப்பாக சமூக நலத்துறையில், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் சுகாதாரம் மற்றும் கல்வியில் முதலீடு செய்வதன் மூலம் முழு மனித ஆற்றலையும் அடைவதற்கான வழியைக் காட்டுகின்றன. எனவே ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மேற்கொள்ளும் வரிசீரமைப்பு முனைவுகள் ஒவ்வொரு மாநிலத்தின் வருவாயை பாதுகாக்கும் விதமாக அமைந்திட வேண்டும்.

**மாநிலத்தின் வருவாயை பாதிக்கும்!**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதங்களை சீரமைக்கும், தருணத்தில் இழப்பீட்டு மேல்வரியும் முடிவுக்கு வரவுள்ளது. ஒரே நேரத்தில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதக் குறைப்பு மற்றும்இழப்பீட்டுமேல்வரியினை நீக்குவது ஆகியன மாநிலத்தின் வருவாயை கணிசமாக பாதிக்கும்.

எனவே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகித மறு சீரமைப்பு காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை ஈடுசெய்ய இழப்பீட்டு மேல்வரியினை நீட்டிக்க வேண்டும்,

தற்போது மேல்வரி விதிக்கப்பட்டு வரும் பொருட்கள் மீது, இழப்பீட்டு மேல்வரியினை தொடர இயலாத நிலையில், மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை குறைப்பதற்கு, மாற்று வழிமுறை செய்யப்பட வேண்டும் .

**கடன் உச்சவரம்பை உயர்த்த வேண்டும்!**

இழப்பீட்டு மேல்வரியினை 4 முதல் 6 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு வருவாய் இழப்பை ஈடுசெய்ய மாநிலங்களுக்கு மட்டும் முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்றும் உடனடி தீர்வாக மாநிலங்களின் நிகர கடன் உச்சவரம்பை மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவிகிதமாக எவ்வித நிபந்தனையும் இல்லாமல் உயர்த்தப்பட வேண்டும் .

மாநில வருவாய் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதத்தை மறுசீரமைப்பதில் தேவையான ஒத்துழைப்பை தமிழ்நாடு அரசு வழங்கும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தினார்.